சாலை விபத்துக்களின்போது மருத்துவ உதவி

* 181. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில், சாலை விபத்துக்களின்போது உடனடியாக மருத்துவ உதவி அளித்திட மருந்தகம் அமைந்திட்ட ஆம்புலன்ஸ் வண்டியினைப் பயன்படுத்திடும் திட்டம் அரசின் ஆலோசனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சாலைகளிலே அடிக்கடி இம்மாதிரியான விபத்துக்கள் ஏற்படுகிறபொழுது அப்படிப்பட்ட விபத்துகளிலே சிக்கிக் கொண்டவர்களுக்கு உடனடிச் சிகிச்சை அளிப்பதற்கு இப்படிப்பட்ட ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு அரசாங்கம் இனியேனும் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விபத்து நடந்த இடத்திலிருந்து செய்திகள் மருத்துவமனைக்கு வந்து அதற்குப் பிறகு தான் ஆம்புலன்ஸ் வண்டி சென்று விபத்துக்குள்ளானவர்களை அழைத்து வர இயலும். எனவே இதிலே கால தாமதம் ஏற்படத்தான் செய்யும். போலீசார், மற்றவர்கள் இவர்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டுவந்து விட்டால் விபத்துக்கு உள்ளானவர்களின் உயிரைக் காப்பாற்றும் அளவிற்கு உதவி செய்யமுடியும்.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that there is really a time-lag for sending the ambulance to the place of accident. Sometimes it takes two to three hours according to my experience recently. Will the Government think of having "special ambulances" exclusively earmarked for this sort of increasing road accidents?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the scheme is to be implemented with more than dozen vans in so many places in different parts of the City and also around the City and also in the districts and it will create so much of expenditure on the side of both recurring and non-recurring. As such, it cannot be implement.

1973 பிப்ரவரி 28]

ed but on the other hand the present ambulance vans which are with the medical institutions and also with the Fire Services, will be utilised whenever there is accident.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சாலை விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து கொண்டே வருகிறது. அன்றாடம் இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரங்கள் போலீஸ் டெபுடி கமிஷனர் அலுவலகத்தின் முன்னால் பொறிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அது போல் மருத்துவ மனைகளிலே . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியே இன்னும் போடவில்லை, ஸ்டேட்மெண்டாக இருக்கிறது. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : அப்படிப்பட்ட விளம்பரப் பலகைகளை வைத்தால் எச்சரிக்கையாக இருக்கும் என்பதால் அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைகளுக்கு வருகின்ற நோயாளிகளை அச்சுறுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னை நகரில் சில குறிப்பிட்ட சாலைகளில்தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட சாலைகளிலே ஆம்புலன்ஸ் வண்டிகளை நிறுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தப் பிரச்னை குறித்து கேள்வி பதிலிலே முடிவு செய்துவிட முடியாது. இது அனுபவ ரீதியாக உள்ள நிலைமைகளை ஆராய்ந்து அலுவலக அதிகாரிகள் அவ்வப்பொழுது ஆலோசனை செய்து நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்பொழுது இந்தப் பிரச்னைகுறித்து கேள்வி பதிலிலே முடிவுசெய்துவிட முடியாது என்று சொன்னார்கள். அப்படியானால் இதைப்பற்றித் தனியாக அரை மணி நேரம் ஒதுக்கி அதிலே விவாதிப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி நேரத்திலும், ஒற்றிவைப்புப் பிரச்னையைப்பற்றி எண்ணிக்கொண்டிருப்பது கூடாது. நான் சொன்னது இலாக்கா அதிகாரிகள் இதைப்பற்றி அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அனுபவங்களைப் பார்த்துக் கூடிப் பேசி முடிவு செய்வார்கள் என்பதுதான். இது விவாதத்திற்கே உரிய பிரச்னை அல்ல. நடைமுறைப் பிரச்னை, நிருவாகம் ஆராய்ந்து செயல்படுத்தக்கூடிய பிரச்னை ஆகும்.

கிராமப்புறங்களில் பொதுச் சுடுகாடுகள்.

*182 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பொதுச் சுடுகாடு ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றதா ?

(இ) ஆம் எனில், உள்ளாட்சி மன்றங்களே அவற்றை நடத்து வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பல கிராமங்களிலே இம்மாதிரிப் பொதுச் சுடுகாடுகள் இல்லாத காரணத்தினுலே சாதிச் சண்டைகள் மூண்டு வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு பொதுச் சுடுகாடுகளை அந்தந்த இடங்களில் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய முறையிலே ஆங்காங்குள்ள உள்ளாட்சித் துறையினருக்கு அரசு உரிமை அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கிராமத்திற்கு ஒரு சுடுகாடு தேவை என்ற அடிப்படையில் அது சுடுகாடாக இருந்தாலும் இடுகாடாக இருந்தாலும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி மன்றச் சட்டத்தின்படி 63-வது பிரிவு உட்பிரிவின்கீழ் அதிகாரம் அதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. பொதுச் சுடுகாடு என்பது இரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து இரண்டு ஊராட்சிகளுக்கும் சேர்த்து அமைக்கப்படுவது ஆகும். சாதிச் சண்டைகள் என்பது சுடுகாட்டிலேயே எரிந்துபோக வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது.